# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 09.10.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

அல்லாஹ்வுடைய ஒரு பண்பு **கவி – ஆற்றல் உள்ளவன்** என்பதாகும். இதுபற்றி திருக்குர்ஆனில் வருகிறது. பொதுவாக இச்சொல் மனிதனுக்காகப் பயன்படுத்தப்படும்போது பௌதீக ஆற்றல் உள்ளவன்; வேலை செய்வதற்கு சக்தி உள்ளவன்; அறிவு ரீதியாக உறுதியான ஆதாரங்கள் உள்ளவன் (என்று கூறப்படுகிறது). இறைவனைப் பற்றி **கவி** என்ற சொல் பயன்படுத்தப்படும் போது, எல்லா வகையான ஆற்றல்களும் உள்ளவன். அவனது ஆற்றலுக்கு முன் எவரும் நிற்க முடியாத அளவுக்கு ஆற்றல் உள்ளவர்கள் அனைவரை விடவும் ஆற்றல் வாய்ந்தவன் என்பதாகும். ஆற்றல்கள் அனைத்திற்கும் உரிமையாள(னான இறைவ)ன் தனது படைப்பினங்களுக்கு இந்த ஆற்றலை வழங்கி ஒரு வரையறைக்குட்பட்ட அளவுக்கு அவனையும் (மனிதனையும்) ஆற்றல் வாய்ந்தவனாக்கக் கூடியவன் ஆவான்.

நான் ஏற்கனவே கூறியது போன்று அல்லாஹ் தனது பண்பு குறித்து பல்வேறு இடங்களில் விளக்கியுள்ளான். எங்கெல்லாம் தனது பண்புகளைக் குறித்து கூறுகிறானோ அங்கெல்லாம், எச்சரிக்கை செய்வதற்காகவோ அல்லது தீய விளைவுகளைக் குறித்து அச்சமூட்டுவதற்காகவோ குறிப்பிடுகிறான். இறைவனுடைய வார்த்தைகளுக்கு காது கொடுக்காதவர்களை எச்சரிக்கை செய்கிறான். அவர்களுக்கு அல்லாஹ்விடமிருந்து தண்டனையும் இறங்கியது. ஆனால் அத்துடன் இறைவன் கூறியுள்ளான். அல்லாஹ் மிகவும் ஆற்றல் உள்ளவன் என்று புரிந்தவர்கள் அல்லாஹ்வின் அருளுக்கு வாரிசாகின்றனர்.

எனவே, சூரா பக்கராவில் அல்லாஹ்வை விட்டு விட்டு, சிலைகளை வணங்குபவர்களுக்கு அவர்களின் **ஷிர்க்** – இணை வைத்தலே தண்டனைக்கு காரணமாகி விடும் என்று கூறியுள்ளான். ஆனால் மூஃமின்களின் அடையாளத்தையும் அத்துடன் கூறுகிறான். மூஃமின்கள் அல்லாஹ்வுடைய விருப்பத்தின் முன் அனைத்தையும் வைத்து விடுகின்றனர்.

**சூரா பக்கராவின் 166 வது வசனத்தில் அல்லாஹ் கூறுகிறான்:**

**வமினன்னாஸி மய்யத்தஹிது மின் தூனில்லாஹி அன்தாதய் யுஹிப்பூனஹும் கஹுப்பில்லாஹ். வல்லதீன ஆமனூ அஷத்து ஹுப்பல்லில்லாஹ். வலவ் யரல்லதீன ழலமூ இத் யரவ்னல் அதாப அன்னல் குவ்வத்த லில்லாஹி ஜமீஅ. வஅன்னல்லாஹ ஷதீதுல் அதாப்.**

*பொருள்: மக்களுள் சிலர், அல்லாஹ் அல்லாதவற்றை அவனுக்கு இணையாக்கி, அல்லாஹ்வை நேசிப்பது போன்று அவற்றை நேசிக்கின்றனர். ஆனால், நம்பிக்கை கொண்டவர்கள் அல்லாஹ்வை(யே) மிகுதியாக நேசிக்கின்றனர். அநீதி இழைப்பவர்கள் தண்டனையைக் காணும் நேரத்தை (இப்பொழுதே) காண்பார்களாயின், எல்லா வல்லமைகளும் அல்லாஹ்வுக்கே உரியன(வென்றும்) அல்லாஹ் கடுமையான தண்டனையளிப்பவன் (என்றும் புரிந்து கொள்வார்கள்). (2:166)*

இந்த வசனத்தில் மனிதனுடைய பிறப்பின் நோக்கம், அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவதுதான். ஆனால் சிலர் இந்த நோக்கத்தை மறந்து விடுகின்றனர்; கவனம் செலுத்துவதில்லை என்று கூறுகின்றான். மேலும் உலகில் பெரும்பாலோர் இறைநேசம் என்றால் என்ன என்பதை அறிவதில்லை. புரிந்து கொள்வதற்கு முயற்சியும் செய்வதில்லை. இதற்கெதிரில், சிலைகளை உள்ளத்தில் வைத்திருப்பவர்களாயினும் சரி அல்லது வெளிப்படையான சிலைகளை பூஜை செய்பவர்களாயினும் சரி, அவர்களின் பிரியம் இறைவன் மீது வைக்க வேண்டிய பிரியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கற்பனை கூட செய்ய முடியாத அளவுக்கு அதிகமாக உள்ளது. அதற்கு மாறாக உண்மையான மூஃமின் தனது உள்ளத்தில் அல்லாஹ்வுடைய அன்பை அதிகமாக உள்ளத்தில் கொண்டுள்ளனர். எனவே இந்த வசனத்தில் இறைவனை விட்டு விலகியிருப்பவர்களுக்கு

WARNING செய்யப்பட்டுள்ளது. அல்லாஹ் அல்லாதவற்றின் அன்பு உங்களுக்கு பயனளிக்கும் என்று கருதுகிறீர்கள். ஆனால் அவையனைத்தும் ஆற்றல் அற்றவையே ஆகும். உண்மையான ஆற்றல் இறைவனுக்கு உள்ளது.

**அல்லாஹ் இன்னோரிடத்தில் கூறுகிறான்:**

நான் ஷிர்க் செய்பவர்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டேன். எனவே இவ்வுலகின் தற்காலிக வழிகாட்டல்கள் உங்களை இறைவனை விட்டு விலக்கி, உங்களை தீய முடிவின் பக்கம் கொண்டு செல்கின்றது. அத்துடன் மூஃமின்களிடம் கூறுகிறான். நீங்கள் மூஃமினாக இருப்பதாக வாதம் செய்வீர்களாயின், உண்மையான மூஃமினுக்கு அல்லாஹ்வுடன் உள்ள அன்பு மற்ற அன்புகளை விட அதிகமாக இருக்கிறது. அவன் மீது கொண்ட அன்பு, அனைத்தையும் மிகைத்துவிடக் கூடியதாக ஒரு மூஃமினின் அன்பு அமைந்து விடுகிறது. இவ்வுலகிலும், மறுவுலகிலும் என்னென்ன வெகுமதிகள் ஒருவருக்கு கிடைக்க உள்ளதோ அவையனைத்தும் இறைவன் மீது கொண்ட நேசத்தால் தான் கிடைக்கும்.

அல்லாஹ் மீது அன்பு கொள்ளும் போது, அந்த அன்பே அவனது அன்பிற்குரியவர்களின் மீதும் அன்பு காட்டுவதற்கு வழிகாட்டுகிறது.

எனவே எப்போதும் ஒரு மூஃமின் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு மூஃமினுடைய ஈமான் அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் மீது தன்னலமற்ற அன்பு காட்டும் போதுதான் முழுமையடைகிறது. **ஃபத்தபிவூனீ யுஹ்பிப்குமுல்லாஹ்** – *என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான் (3:32)* என்பதை ஒரு மூஃமின் புரிந்திருக்க வேண்டும்.

தரூது, ஸலவாத்துகள் மூலம் தனது அன்பை அவர் வெளிப்படுத்த வேண்டும். உலகின் எந்த நேசமும் இந்த இருவரின் மீதுள்ள நேசத்தை மிகைத்து விடக் கூடாது. மேலும் மற்ற மனிதர்களையும் நேசிக்குமாறு இறைவன் கூறுகிறான். இறை நேசத்தை ஒருவர் பெறுவதற்கு அவனது படைப்பினங்களை நேசிப்பது மிகவும் அவசியமாகும்.

**பிறகு இறைவன் கூறுகிறான்:**

முஷ்ரிக்குகள் ஷிர்க்கின் மூலம் தமக்குரிய தண்டனையை தாமே தேடிக் கொள்கின்றனர். ஆனால் மூஃமின் என்று வாதம் செய்து கொண்டு இந்த நேசத்தை கவனிக்கவில்லை எனில் – இறை நேசத்தின் விளைவால் அவர்களிடம் உருவாக வேண்டிய பலன் உருவாகவில்லை எனில் அவர்களும் தம்மீது அநீதி இழைத்துக் கொள்பவர் ஆவார். அல்லாஹ்வுடைய **கவி – ஆற்றல் உள்ளவன்** என்ற பண்புக்கு முக்கியத்துவம் கொடுக்காதவர்களாக இருக்கிறார்கள். அதற்குரிய கண்ணியத்தை அவர்கள் வழங்கவில்லை. அல்லாஹ்வுடைய பிடியைப் பற்றி அத்தகையோர் கவனத்தில் கொள்வதில்லை.

ஒரு மூஃமின் தனது வாழ்வில் ஆற்றல் வாய்ந்த இறைவனைப் புரிந்து – அவன் எல்லா ஆற்றல்களுக்கும் உரிமையாளன் என்று உணர்ந்தவாறு தமது ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்க வேண்டும். எனவே முஷ்ரிக்குகள், அல்லாஹ் அல்லாதவற்றை பூஜை செய்பவர்கள் ஆகிய இவர்களுக்கு கிடைக்கப் போகிற தீய விளைவைச் சுட்டிக் காட்டி அல்லாஹ் அச்சமூட்டியுள்ளான். அதனைப் பற்றி இறைவன் விளக்கும் போது அத்துடன் மூஃமின்களிடம், அல்லாஹ்வின் முஹப்பத்தைத் தேடுமாறும் கவனமூட்டியுள்ளான்.

எத்தகைய நேசம் கொள்ள வேண்டும்? இறை நேசம் என்றால் என்ன? அத்தகைய நேசம் பற்றி **ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நேசம் என்பது செயற்கையான சம்பிரதாயமான ஒன்றல்ல; மாறாக மனித ஆற்றல்களுள் ஓர் ஆற்றலாகும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். உள்ளத்தில் ஒன்றை விரும்பி அதன் பக்கம் ஈர்க்கப்படுவதன் பெயராகும். ஒரு பொருளின் அசல் நிலை, அப்பொருளின் முழுமையான நிலையை அடையும் போது தெள்ளத் தெளிவாக வெளிப்படுகிறது. இதுவே நேசத்தின் நிலையாகும். ஒரு மனிதன் தனது

முழுமையான நிறைவான தகுதியை எட்டும் போதுதான் இந்த நேசம் அவரிடம் வெளிப்படுகிறது. நேசம் முழுமை அடையும் போது, நேசத்தின் விளைவும் முழுமையாக வெளிப்படுகிறது.

**மேலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**உஷ்ரிபூ ஃபீ குலூபிஹிமுல் இஜ்ல பிகுஃப்ரிஹிம்** - *அவர்களின் நிராகரிப்பின் காரணமாக, அவர்களின் உள்ளங்களில் கன்றுக்குட்டி(யின் மீதுள்ள பற்று ஆழமாகப்) புகுந்து விட்டது. (2:94)*

அதாவது அம்மக்கள் கன்றுக்குட்டியின் மீது அளவுக்கு அதிகமான நேசம் கொண்டனர். அந்த நேசத்தை சர்பத்தைப் போன்று குடித்து விட்டனர். ஒருவர் ஒன்றை முழுமையாக நேசிக்கும் போது அதனை குடித்து விடுகிறார்; உண்டு விடுகிறார். பிறகு அவர் நேசிக்கின்ற பொருளின் சாயலைப் பெற்று விடுகிறார். எந்த அளவுக்கு ஒரு மனிதனுக்கு அதிகமாக ஒன்றின் மீது நேசம் ஏற்படுமோ அந்த அளவுக்கு அவன் அதனை நோக்கி இயல்பாகவே ஈர்க்கப்படுகின்றான். அவன் நேசிக்கின்ற அப்பொருளைப் பார்த்து பயப்படுகிறான். இதுவேதான் இறைவனுடன் உள்ள நேசமாகும். ஒரு மனிதன் இறைவனிடம் நேசம் கொள்ளும் போது அவனது தகுதிக்கும் ஆற்றலுக்கும் ஏற்ப ஒருவகையில் அந்த இறைவனின் ஒளியைப் பெற்று விடுகின்றான். அதே போன்று **ஷய்த்தா**னின் மீது நேசம் கொள்பவர் அந்த **ஷய்த்தா**னிடம் உள்ள இருளைப் பெற்று விடுகின்றான். மேலும் மனிதனிடம் அந்த உண்மையான நேசமே எதிர்பார்க்கப்படுகிறது. மனிதன் உண்மையான முறையில் அவனிடத்தில் தன்னை மாய்த்து, உள்ளமும் உயிரும் ஒளி பெற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தனது நேசத்திற்குரியவனிடம் தன்னை இணைத்து வாழ்வைப் பெற முயற்சி செய்ய வேண்டும். உண்மையான நேசம் கொண்டவர் தனது நேசத்திற்குரியவரிடம் மாய்ந்து போகின்றார். தனது நேசத்திற்குரியவரின் படம் அவரது உள்ளத்தில் நிலைபெற்று விடுகிறது. அந்த படம் அவனை அப்படியே அருந்தி விட வேண்டும் என்று அம்மனிதனைத் தூண்டுகிறது. பிறகு அம்மனிதன் தனது நேசத்திற்குரியவரின் சாயலைப் பெற்று அவருடன் இணைந்து விடும்போதுதான் அவன் மீது கொண்ட நேசத்தில் தன்னை மாய்த்து விட்டார் என்று கூறப்படுகிறது. அதனை அவர் உலகின் முன் வெளிப்படுத்துகிறார்.

**முஹப்பத்** என்ற அரபிச் சொல்லின் பொருள் **மூழ்கி விடுதல்** என்பதாகும். எனவே தான் கழுதையின் வயிறு தண்ணீரால் நிறைந்து விட்டது என்று சொல்வதற்கு அரபியில் **தஹப்ப பல் ஹுமாரு** என்று கூறப்படுகிறது. அதேபோன்று ஒட்டகத்தின் வயிறு தண்ணீரால் நிறைந்து விட்டது என்பதற்கு **ஷரபத்தில் இபல ஹத்தா தஹப்ப** என்று கூறப்படுகிறது. அதேபோன்று தானியத்திற்கு **ஹப்பா** என்று கூறப்படுகிறது. காரணம் தானியத்தின் எல்லா அம்சங்களாலும் இத்தானியம் நிறைந்துள்ளது என்பதாகும். இந்த அடிப்படையில் தூக்கத்திற்கு **அஹ்பாப்** என்று கூறப்படுகிறது. அதாவது அந்நிலையில் அது மனிதனது இருப்பை முற்றிலுமாக மாய்த்து விட்டது. அதாவது உறங்கி விட்டான். இன்னொரு பொருளின் ஆதிக்கம் அவனை இழக்கச் செய்து விட்டது (என்பதாகும்).

மனிதன் இவ்வாறுதான் தன்னிடமுள்ள அனைத்தையும் இறைவனுக்காக தியாகம் செய்ய வேண்டும். எல்லா ஆற்றல்களும் வாய்ந்த இறைவனுக்காக, **கவி** ஆகிய இறைவனுக்காக மனிதன் தன்னிடமுள்ள அனைத்தையும் இழந்து விடும் போது அவனுக்கு எதனை கொடுக்கிறான் என்று பிறகு பாருங்கள்!

சூரா ஹஜ்ஜின் 41வது வசனத்தில், ஆற்றல் வாய்ந்த காஃபிர்களுக்கு எதிரில் தானும் ஆற்றல் வாய்ந்த இறைவன் என்று இறைவன் மூஃமின்களுக்கு ஆறுதல் வழங்குகின்றான்.

இப்போது அநீதி கட்டவிழ்த்து விடப்படுகிறது. சிறுபான்மை மக்களாகவும், எந்த ஆற்றலும் இல்லாதவர்களாகவும் இருந்தும் கூட பலவீனமானவர்களாக இருந்தும் கூட காஃபிர்களுடன் சண்டையிடுங்கள். அவர்கள் **ஷிர்க்**கில் எல்லை கடந்து விட்டனர். அநீதியிலும் எல்லை கடந்து விட்டனர். இப்போது மார்க்கம் நிலை நிற்குமா? நிற்காதா? என்ற கேள்வி எழுந்து விட்டது. அநீதி அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அல்லாஹ்வுக்கு இணை வைக்கின்ற இம்மக்கள் எந்தவொரு மார்க்கத்தையும் சகிக்க முடியாமல் அநீதி செய்வதற்கான இலக்காக மூஃமின்களை ஆக்கி விடுவர். எனவே அவர்களை எதிர் கொள்ளுங்கள் என்று இறைவன் அவ்வசனத்தின் மூலம் கட்டளையிட்டான்.

*எங்களின் இறைவன் அல்லாஹ் என்று சொன்னதற்காக மட்டும் அநியாயமாக அவர்களின் வீடுகளிலிருந்து விரட்டப்பட்டவர்களுக்கும் (போரிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது). மேலும் அல்லாஹ் சில மனிதர்களுக்கு மற்றவர்களைக் கொண்டு பதிலடி கொடுக்க வைக்கவில்லையாயின், கோயில்களும், ஆலயங்களும், மடங்களும், அல்லாஹ்வின் பெயர் அதிகமாக நினைவு கூறப்படும் பள்ளிவாயில்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கும். மேலும் அல்லாஹ் அவனு(டைய மார்க்கத்து)க்கு உதவுபவர்களுக்கு நிச்சயமாக உதவுவான். நிச்சயமாக அல்லாஹ் சக்தி வாய்ந்தவனும் மிகைத்தோனும் ஆவான். (22:41)*

எனவே அமைதியை நிலைநாட்டுவதற்காக அநீதிக்கு எதிராக எதிர்நடவடிக்கை மேற்கொள்ள அல்லாஹ் அனுமதி அளிக்கின்றான். அவ்வாறு நீங்கள் செய்யும் போது உங்களுககு அல்லாஹ்வின் உதவி கிடைக்கும் என்று கூறப்பட்டுள்ளது. மார்க்கப் போர்கள் உங்கள் மீது திணிக்கப்படும் போது நீங்கள் தற்காப்பு செய்ய வேண்டும் என்ற அடிப்படை விதி இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தமது மார்க்கத்தை மட்டும் காப்பாற்றுங்கள் என்பதல்ல. மாறாக மற்ற மார்க்கங்களையும் பாதுகாக்க வேண்டும். ஏனெனில் நாங்கள் எந்த மார்க்கத்தைப் பின்பற்றுபவரையும் பலவந்தமாக மாற்றுவதில்லை என்பது ஒரு மூஃமினின் வாதமாகும். ஏனெனில் அவ்வாறு ஒருவரின் மார்க்கத்தை பலவந்தமாக மாற்றுவது இஸ்லாமிய போதனைக்கு மாற்றமானதும் உலக அமைதியை அழிப்பதும் ஆகும். நேர்வழியைக் கொடுப்பதும் கொடுக்காமல் இருப்பதையும் இறைவன் தனது கையில் வைத்துள்ளான். ஆம்! அன்புடனும் ஞானத்துடனும் புரிய வைக்க முயற்சி செய்ய வேண்டும். அதுவும் ஒரு முஸ்லிமுக்கு கடமையாகும்.

மூன்றாவது விஷயம், அல்லாஹ் மார்க்கப் போர் செய்யும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ள மூஃமின்களுக்கு கண்டிப்பாக உதவி செய்கின்றான். அக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வில் நடந்த அநீதிகள் எல்லை கடந்தவையாக இருந்தன. முஸ்லிம்களின் நிலை எல்லாருக்கும் தெரியும். இந்நிலையில் ஹிஜ்ரத்திற்குப் பின் மார்க்கப்போர் முஸ்லிம்களால் செய்யப்பட்டது. இறைவனும் தான் ஆற்றல் உள்ளவன் என்று நிரூபித்துக் காட்டினான். அனுபவமற்றவர்களாகவும், எண்ணிக்கையில் குறைந்தவர்களாகவும் இருந்த நிலையிலும் இறைவன் சண்டையிடுமாறு கட்டளையிட்டு உதவியும் செய்தான். மலக்குகளை முஸ்லிம்களுக்கு உதவி செய்யுமாறு அனுப்பினான். எனவே இதன் மூலம் ஒரு விஷயம் தெளிவாகிறது. தற்காப்பிற்காக மட்டுமே இறைவன் யுத்தத்திற்கு அனுமதி வழங்கினான். அமைதியை நிலைநாட்ட அனுமதி வழங்கினான். மார்க்கத்திற்கு எதிராக போர் செய்பவர்கள் மீது, போர் செய்வதுதான் ஜிஹாத் ஆகும். மற்ற முஸ்லிம்கள், மற்றவருடன் அல்லது தமக்குள் செய்யும் இக்காலத்தின் யுத்தங்கள் அனைத்தும் அரசியல் யுத்தங்களே ஆகும். அது ஜிஹாத் அல்ல. பிறகு அல்லாஹ் தனது **கவி – ஆற்றல் உள்ளவன்** என்பதை பிரகடனம் செய்தவாறு கூறுகிறான். இவ்வாறு மார்க்கத்திற்கு எதிராக தாக்குதல் தொடுப்பவருக்கு எதிராக அதனை ஏற்றுக் கொண்டவர்களுக்கு உதவி செய்வேன் என்று கூறினான். ஏனெனில் கடைசியானதும் முழுமையாக்கப்பட்டதுமான மார்க்கம் இறைவனிடத்தில் இஸ்லாமேயாகும். எனவே முஸ்லிம்களுக்கு உதவி செய்வதாக இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான். **இன்னல்லாஹ கவியுன் அஸீஸ்** – நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல் உள்ளவனும், மிகைத்தோனும் ஆவான் என்று கூறி முஸ்லிம்களுக்கு எதிரில் மார்க்கச் சண்டை நடக்குமானால் நான் முஸ்லிம்களுக்கு உதவி செய்வேன் என்று பிரகடனம் செய்தான்.

எனவே இக்காலத்தில் நடக்கும் யுத்தங்களில், முஸ்லிம்கள் வெற்றி அடைவதற்குப் பதில் தோல்வியடைந்து வருவது, இக்காலத்தில் நடைபெறுவது ஜிஹாதும் அல்ல. மார்க்கப் போரும் அல்ல என்பதற்கு ஆதாரமாகும். மேலும் இதனால் அல்லாஹ்வின் உதவியும் கிடைக்கவில்லை. எனவே முஸ்லிம்கள் இப்போதும் வாளும் துப்பாக்கியும் ஏந்துவதற்குப் பதில் தமது நற்செயல்களை சீர்திருத்த முயற்சி செய்ய வேண்டும். இறைவனுக்கு முன்பாக தமது சீர்திருத்தத்திற்காக அழுது மன்றாடுங்கள். இவ்வாறு துப்பாக்கியை தவிர்த்து உலகத்தை தம் பக்கம் ஈர்த்தீர்கள் எனில் மற்ற முஸ்லிம்களுக்கு எதிரில் இதுபோன்ற சக்திகளைப் பயன்படுத்த நிச்சயமாக அனுமதியே இல்லை என்பதும் ஒரு இறைகட்டளையாகும். மற்ற பிரிவினருக்கு எதிரில் ஒருபோதும் அவர்கள் தாக்குதல் தொடுக்க அனுமதி இல்லை. எனவே இக்காலத்தில்

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய போதனைகள் இஸ்லாமிய போதனைகள் பற்றிய சரியான வழிகாட்டலாகத் திகழ்கின்றன. அதன்படி அமல் செய்யுங்கள். **கவி** ஆகிய இறைவன் எவ்வாறு உங்கள் உதவிக்கு வருகிறான் என்று பிறகு பாருங்கள். பிறகு என்னென்ன காரியங்களையெல்லாம் அவன் காட்டுகின்றான் என்று பாருங்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இஸ்லாத்தின் ஆரம்ப காலம், மார்க்கப் போர், முஸ்லிம்களுக்கு கிடைத்த இறைஉதவி பற்றியெல்லாம் ஓரிடத்தில் கூறுகிறார்கள்.

முஸ்லிம்கள் ஆரம்ப காலத்தில் குறைந்த எண்ணிக்கையில் இருந்தனர். எனவே அவர்களின் எதிரிகள் தாமே மகத்தானவர்கள்; நாமே பெரும்பான்மை என்ற இயல்பான அகந்தையில், பொருளாதார வளம், மனித வளம், அந்தஸ்து, மற்ற இனத்தை விட தமக்கு இருந்த மேன்மை போன்ற கர்வத்தில் அக்கால முஸ்லிம்களாகிய சஹாபாக்களின் மீது கடும் பகைமை காட்டினர்.

வானத்தின் செடி இப்பூமியில் நிலைநாட்டப்படுவதை அவர்கள் விரும்பவில்லை. மாறாக நம்பிக்கையாளர்களை நசுக்குவதற்காக கூச்சலிட்டுக் கொண்டிருந்தனர். இந்த மார்க்கம் உலகில் நாட்டப்பட அனுமதித்து விட்டால் பிறகு உலகிலிருந்து தமது மார்க்கம் துடைக்கப்பட்டு விடும் என்ற பயம் அவர்களிடம் வந்தது. எனவே இந்த பயத்தின் விளைவாகவே மிகவும் சர்வாதிகாரத்தனமான முரட்டுத்தனமான நடவடிக்கைகள் அவர்களிடத்தில் இருந்து வெளிப்பட்டன. அவர்கள் மிக மிக துன்பகரமான முறைகளில் எல்லாம் முஸ்லிம்களை அழித்தனர். பதிமூன்று ஆண்டு காலம் இதே வேலையைச் செய்து கொண்டிருந்தனர். மிகவும் கருணையற்ற முறையில் இறைநேசமிக்க அடியார்கள் இந்த கொடூர பறவைகளின் வாள்களல் துண்டு துண்டாக்கப்பட்டனர். அனாதைகள், அப்பாவிகள், ஏழைகள் வீதிகளில் கொலை செய்யப்பட்டனர். தீமைக்கு எதிராக தீமை செய்யாதீர்கள் என்ற கட்டளை அவர்களுக்கு இறைவனிடமிருந்து கிடைத்திருந்தாலும் இதனை அந்த நம்பிக்கையாளர்கள் சகித்து வந்தனர். அவர்களின் இரத்தத்தால் வீதிகள் சிவந்தன. அவர்கள் குர்பானி விலங்குகளைப் போன்று அறுக்கப்பட்டனர். இறைவனின் தூய ரஸூல் (அன்னாரின் மீது வானம், பூமி அளவுக்கு அளவற்ற சலாம் உண்டாகட்டும்) அவர்களும் கூட இரத்தம் சொட்ட சொட்ட விரட்டப்பட்டனர். அந்த உறுதியின் மலை ஒப்பற்ற கருணையுடன் அத்தனை துயரங்களையும் சகித்துக் கொண்டது. அவர்களின் எளிமை கண்டு எதிரிகளின் விஷமம் நாளுக்கு நாள் அதிகரித்தது. அன்னாரை தமது வேட்டைப் பொருளாகக் கருதினர். இந்நிலையில் இறைவன் உலகில் கருணையின்மையும் கடுமையும் எல்லை கடந்ததைக் கண்ணுற்றபோது தனது அடியார்களை அன்புடன் நினைவு கூர்ந்தான். எதிரியின் மீது அவனது கோபம் எழுந்தது. தனது வார்த்தைகள் மூலம் அநீதியிழைக்கப்பட்ட அடியார்களுக்கு அறிவித்தான். நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இன்று உங்களுக்கு அவர்களை எதிர்கொள்ள அனுமதி அளிக்கின்றேன். நான் அநீதியிழைப்பவர்களுக்கு தண்டனை கொடுக்காமல் விடமாட்டேன். இந்த கட்டளையைத்தான் இன்னொரு வார்த்தையால் ஜிஹாத் என்று சொல்லப்பட்டது. அந்த கட்டளையின் அசல் வாக்கியம் திருக்குர்ஆனில் உள்ளது.

*எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்கு (போரிட) அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)*

அநீதியான முறையில் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டவர்களுக்கு எதிரிகளை எதிர்க்க அனுமதி அளிக்கப்படுகிறது. நிச்சயமாக அல்லாஹ் அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய ஆற்றல் பெற்றவன் ஆவான். இந்த கட்டளை அக்காலத்திற்குரியது. நிரந்தரமானதல்ல. அக்காலத்திலோ முஸ்லிம்கள் ஆடு, மாடுகள் போன்று அறுக்கப்படும் கொடூரமான காலமாக இருந்தது. எனவே அல்லாஹ் ஆற்றல் உள்ளவர்களுக்கெல்லாம் ஆற்றல் வாய்ந்தவனும் ஆவான். தனது கோபத்தை அநீதியிழைப்பவர்கள் மீது இறக்கினான்.

மக்காவில் துன்பமிழைத்தவர்கள், உடல்களை இரண்டாகப் பிளந்தவர்களுக்கு எதிராக இறைவனது உதவி வந்தது. அவர்களுக்கு ஆதரவளித்தது மட்டுமல்ல. அவர்களின் கையில் அந்த நாட்டின அதிகாரமே

வழுங்கப்பட்டது.  இதுதான் இறைவனின் மகிமை. இறைவன் திருக்குர்ஆனில், தான் **கவி** ஆக இருப்பது பற்றி கூறியுள்ளான்.  பல இடங்களில் நபிமார்களின் எதிரிகளின் தீய விளைவுகளைக் கூறியுள்ளான். சில போதனைகளும் வழங்கியுள்ளான். நான் படித்துக் காட்டிய இந்த இரு வசனங்களில் வருங்காலத்தைப் பற்றியும் முன்னறிவிப்பு உள்ளது.  அவனது ரஸூல் (ஸல்) அவர்கள் வருங்காலத்திலும் வெற்றி பெறுவார்கள்.

**சூரா முஜாதல -ல் அல்லாஹ் கூறுகிறான்:**

**கதபல்லாஹி லஅக்லிபன்ன அனா வருஸிலி. இன்னல்லாஹ கவிய்யுன் அஸீஸ்** - *நிச்சயமாக நானும் என் தூதர்களும் வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் விதித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் ஆற்றல்மிக்கவனும் வெற்றிக்குரியவனும் ஆவான். (58:22)*

எனவே உண்மை எப்போதும் ஜெயிக்கிறது. நபிமார்களின் எதிரிகள் எப்போதும் தமது தீய முடிவையே அடைகின்றனர்.

முஸ்லிம்கள் இஸ்லாமிய கொடியை உயர்த்திப் பிடித்தவாறு இருந்தவரை, அவர்கள் அமல் செய்த காலம் வரை வெற்றிகள் அவர்களின் காலடிகளை முத்தமிட்டவாறு இருந்தன.  ஆனால் மார்க்கத்தைக் குறித்தோ, இஸ்லாத்தைக் குறித்தோ கவலை கொள்ளாமல், தனது நாட்டின் நிலையே கவலைக்குரியதாக ஆனபோது – தமது நாட்டைக் காப்பாற்ற முனைந்த போது – முஸ்லிம் நாடுகளின் வளத்தை பிற நாடுகள் பொறாமைக் கண்கொண்டு பார்த்தன. ஆம். முஸ்லிம் நாடுகளில் சிலவற்றிடம் எண்ணெய் வளம் இருக்கிறது. ஆனால் செல்வ வளமிக்க முஸ்லிம் நாடுகள்கூட தாம் நிலைத்திருப்பதற்காக முஸ்லிம் அல்லாதவர்களின் ஆதரவை நாடத் தொடங்கின. இக்காலத்தில் முஸ்லிம்களிடம் எந்தவொரு பெருமைக்குரிய அம்சமோ, முன்னேற்றத்தின் அறிகுறியோ தென்படவில்லை.  வீழ்ச்சி, இழிவு இரண்டும்தான் இஸ்லாம் குறித்து கவலைப்படுபவரின் கண்ணில் தென்படுகின்றன.

அல்லாஹ்விடமிருந்து கிடைத்த அந்த வெற்றி பற்றிய வாக்குறுதி தவறாகி விட்டதா? அல்லது வாக்குறுதியின் காலம் முடிந்து விட்டதா? அல்லது அந்த வாக்குறுதியை ஒரு குறிப்பிட்ட காலத்திற்காக அல்லாஹ் வழங்கியிருந்தானா? அல்லது அல்லாஹ்வின் **கவி – ஆற்றல் மிக்கவன்** என்ற பண்பில் ஏதும் குறைவு ஏற்பட்டு விட்டதா? இல்லை.  இந்த இவையனைத்தும் தவறாகும். அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. கியாமத் வரை நிலைத்திருக்கக் கூடியது. வளர்ச்சி பெற்றுக் கொண்டே செல்லும் மார்க்கம் இது என்ற வாக்குறுதி உண்மையானது.  அல்லாஹ்வின் எல்லா பண்புகளும் **கவி** என்ற பண்பும் நிரந்தரமானது.  நிலைத்து நிற்கும் இந்த வெற்றி, ஆற்றல் மிக்கவன் என்ற பண்போடு இக்காலத்தின் இமாமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை இறைவன் அனுப்பினான்.  இறைவன், தனது இல்ஹாம் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு அறிவித்தான்.

**கதபல்லாஹு லஅக்லிபன்ன அனா வ ருஸுலி** – நானும் எனது தூதரும் வெற்றி பெற்றே தீருவோம் என்று அல்லாஹ் எழுதி விட்டான்.

எனவே இஸ்லாம் மார்க்கத்தின் ஒளி உலகில் மீண்டும் பரவ வேண்டியுள்ளது. இந்த மார்க்கம் மிக உறுதியுடன் உலகில் நிலைநாட்டப்பட வேண்டியுள்ளது. தனது **கவி** என்ற பண்பு குறித்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு உதவிகள் செய்யப் போவதாகவும் இறைவன் பலமுறை இல்ஹாம் மூலம் அறிவித்தான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களைக் குறித்து இறைவன் கூறினான்.  **குவ்வதிர் ரஹ்மானி லி உபைதில்லாஹிஸ்ஸமது** – இறைவனது ஆற்றல் தனது அடியாரிடம் தான் சர்வ சுதந்திரமுள்ள தன்னிறைவு பெற்றவன் என்பதை வெளிப்படுத்திக் காட்டும்.  பிறகு கூறினான். **இன்னஹுகவிய்யுன் அஸீஹ்** – நிச்சயமாக அவன் ஆற்றல் மிக்கவனும் வெற்றியாளனும் ஆவான்.

**மேலும் ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் இறைவன் கூறுகின்றான்:**

**இன்ன ரப்பி கவிய்யுன் கதீர். கவியுன் அஸீஸ்** – எனது இறைவன் ஆற்றலும் வல்லமையும் உள்ளவன்.  ஆற்றல் உள்ளவனும் வெற்றியாளனும் ஆவான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இன்னோர் இல்ஹாம் இதுவாகும்.

நான் எனது பிரகாசத்தைக் காட்டுவேன். தனது வல்லமையைக் காட்டுவேன். உலகத்தின் துன்பத்திலிருந்து காப்பாற்றுவேன். உலகில் ஓர் எச்சரிப்பாளர் தோன்றினார். உலகம் அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. இறைவன் அவரை ஏற்றுக் கொண்டு பெரும் தண்டனைகள் மூலம் அவரது உண்மையை வெளிப்படுத்துவான்.

இந்த இடத்தில் ஒரு குழப்பம் உள்ளது. எனவே நீர் உறுதியான பொறுமை வாய்ந்த நபிமார்களைப் போன்று பொறுமை காட்டுவீராக. **ஃபலம்மா தஜல்லா ரப்புஹூ லில் ஜபலி ஜஅலஹூ தக்கா** – அவன் துன்பங்கள் என்ற மலை மீது தனது தோற்றத்தை காண்பித்தால் அதனை தவிடு பொடியாக்கி விடுவான். **குவ்வத்திர் ரஹ்மானி உபைதில்லாஹிஸ் ஸமது** – அவன் தனது அடியாருக்காக தனது சர்வ சுதந்திரமான தன்னிறைவை வெளிப்படுத்துவான். **முகாமுன் ல தத்ரக்கல் அப்து ஃபீஹி பஸாயல் அஃமால்** – தேவையற்றவனின் அடியானாக இருப்பது ஒரு பதவியாகும். அது இறைவனது சிறப்பான அடியார்களுக்கு இறைவனால் வழங்கப்படுகிறது. அது மனித முயற்சியினால் பெறக்கூடிய தகுதியல்ல. மனித முயற்சியில்லாமல் எந்த சிறப்பான தகுதிக்கும் இறைவன் மனிதனை தயார் செய்வதில்லை. எனினும் இந்த சிறப்பான பண்பு இறைவன் புறமிருந்து கிடைப்பதால் இறைவனுடனேயே சிறப்பான தொடர்புடையதாகும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எனக்கு இறைவனே அறிவித்தான். சில பெரிய மனிதர்களையும் நாடுகளையும் இறைவன் நம்மிடம் இணைப்பான். மேலும் அவன் கூறினான்.

நான் உனக்கு அருளுக்கு மேல் அருள் செய்வேன். எந்த அளவுக்கு எனில் ‘அரசர்கள் உமது ஆடையிலிருந்து பரக்கத்தை தேடுவார்கள்’. தேடுபவர்கள் பைஅத்தில் இணைவார்கள். பைஅத்தில் இணைவதன் மூலம் அவர்களது அரசும் சமுதாயமும் கூட ஜமாஅத்தில் இணையும். மேலும் அதற்குப் பிறகு அந்த அரசர்கள் குதிரையில் சவாரி செய்யும் நிலையில் எனக்கு கஷ்ஃபில் காட்டப்பட்டனர் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள். இதெல்லாம் வெறும் எதிர்பார்ப்பன்று. இறைவனது வாக்குறுதியாகும். அவனோ எல்லா ஆற்றல்களும் வாய்ந்தவனாவான். இறைவன் தனது நபிமார்களிடம் செய்த வாக்குறுதியை எப்போதும் நிறைவேற்றியே வந்துள்ளான். நிறைய வாக்குறுதிகள் நிறைவேறுவதை நாம் கண்டு விட்டோம். அநீதியிழைக்கப்பட்ட நிலையில் உள்ள நம்மை பார்க்கும் போது பாகிஸ்தானில் சிலரும் சில முஸ்லிம் நாடுகளும் நமது இந்த பேச்சைக் கேட்டு விட்டு ஏதோ பைத்தியக்காரத்தனமாக உளறுகிறார்கள் என்று நினைக்கலாம். ஆனால் இறைவனது தக்தீர் தான் எப்போதும் வெற்றி பெறும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

மனிதனை உலகில் இறைவன் படைத்த நாளிலிருந்து நடைபெற்று வரும் ஒரு சுன்னத் தனது நபிமார்கள், ரஸூல்மார்களுக்கு அவன் உதவி செய்து வருவான் என்பதாகும். எனவேதான் அவன் கூறுகிறான். **கதபல்லாஹூ லஅக்லி பன்ன அன வ ருஸுலி** – நானும் எனது தூதரும் வெறறி பெறுவோம் என்று அல்லாஹ் விதித்துவிட்டான்.

இதில் வெற்றி என்பதன் பொருள், நபிமார்கள், ரஸூல்மார்கள் உலகில் இறைவனின் இருப்பின் ஆதாரங்கள் முழுமை பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதற்கெதிரில் எதுவும் வெற்றி பெற இயலாது. அல்லாஹ் வல்லமைமிக்க அடையாளங்கள் மூலம் அதனை வெளிப்படுத்தி விடுகிறான். எனவே அந்த வெற்றி என்பது அவர்களின் விருப்பம் நிறைவேறுவதில் எவரும் தடை செய்ய முடியாது. அதற்கு முன் எந்த ஆதாரமும் நிலை நிற்க முடியாது. எந்த விசுவாசம் உலகில் பரவ வேண்டும் என்று நபிமார்கள் விரும்புகிறார்களோ அதனை அவர்களின் கையைக் கொண்டே நிலைநாட்டி விடுகின்றான். எந்த உண்மையை நபிமார்கள் கொண்டு வருகிறார்களோ அதனை இறைவன் நபிமார்கள் மூலமே பரவச் செய்து விடுகிறான். ஆனால் அதனை நினைவுபடுத்தும் பணியை நபிமார்களின் கைகளைக் கொண்டு செய்வதில்லை. மாறாக அப்போது அவர்களுக்கு வஃபாத்தைக் கொண்டு மூஃமின்களிடம் ஒரு பயம் உருவான பிறகு எதிரிகளுக்கு ஏளனம்

செய்யவும் ஒரு வாய்ப்பைக் கொடுத்து அவர்கள் ஏளனம் செய்து முடித்த பிறகு தனது வல்லமையின் இன்னொரு கரத்தை நீட்டுவான். பிறகு முழுமையடையாமல் நின்ற பணிகள் தொடர்ந்து நடந்து அதன் எல்லையை அடைவதற்காக சிலரை உருவாக்குகிறான். இதனை அல் வஸிய்யத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்.

ஆக, இரண்டாவது வல்லமையில் நாம் எந்த அளவுக்கு விரைவாக வெற்றியைப் பார்க்க விரும்புகிறோமோ அது நமது இறை தொடர்பு, இறைநேசம், அவனது ரஸூலின் மீது நேசம் மற்றும் அவனது படைப்பினங்களுக்குரிய உரிமைகளை வழங்குதல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும்.

**இதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

**மின்கான லில்லாஹி கானல்லாஹு லஹு** – எவர் அல்லாஹ்வுக்காக ஆகி விடுகிறாரோ அவருக்காக அல்லாஹ் ஆகிவிடுகின்றான். தனது அடியார்களுக்கு அவன் ஒருபோதும் நம்பிக்கை துரோகம் செய்யமாட்டான். எதிரிகள் எந்த அளவு எதிர்த்தாலும் அவர்களுக்கு எந்த இழப்பையும் ஏற்படுத்த முடியாது. இறைவன் மிகவும் ஆற்றலும் வல்லமையும் உள்ளவன் ஆவான். மனிதன் உறுதியான ஈமானுடன் அவனது வல்லமையின் கீழ் வருகிறான். அவனது வியக்கத்தக்க ஆற்றலைப் பார்க்கிறான். பிறகு அவனுக்கு எந்த இழிவும் வராது. நினைவில் கொள்ளுங்கள். இறைவன் சக்தி வாய்ந்தவர்களுக்கெல்லாம் சக்தி வாய்ந்தவனும், தனது செயலை செய்து முடிப்பதில் மிகைத்தவனும் ஆவான். எனவே உண்மையான முறையில் தொழுகையை கடைபிடியுங்கள். துஆவில் ஈடுபடுங்கள். உங்கள் உறவினர்களுக்கும் அதையே போதியுங்கள். இறைவனிடம் முழுமையாக மாய்ந்துவிட்ட பிறகு எந்த துன்பமும் நஷ்டமும் உங்களை தொட முடியாது. நஷ்டத்தின் அசல் வேர் பாவமாகும். நாம் எப்போதும் அல்லாஹ்வின் பற்றும் நம்பிக்கையும் உள்ளவராக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக! எல்லா பாவங்களிலிருந்து தப்பித்து விடுவோமாக! அல்லாஹ்வின் நேசத்தின் நெருப்பை ஒவ்வொரு அஹ்மதியும் பலமாக மூட்டுவீராக! அதன் மூலம் எல்லா அசுத்தங்களும் எரிந்து சாம்பலாகட்டுமாக! பிறகு நீங்கள் உலகிற்கு அன்பையும், நேசத்தையும் காட்டுங்கள். அதுவே உங்கள் விருப்பம் என்பதை உலகிற்கு புரிய வையுங்கள். இவ்வாறு செய்வதற்கு அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பினை வழங்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 09.10.2009**

Translated by : **Muallim M. NIZAMUDDIN**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**